### சென்னை மாநகராட்சியில் சட்ட விதிப்படி சொத்து கணக்கை

# மேயர் பிரியா உள்ளிட்ட 157 கவுன்சிலர்கள் அளிக்கவில்லை

## நடவடிக்கை எடுக்க சட்டத்தில் இடமில்லை என அதிகாரிகள் கைவிரிப்பு

**சென்னை**

மாநகராட்சியில் மேயர் பிரியா உள்ளிட்ட 157 கவுன்சிலர்கள் சட்ட விதிகளின்படி சொத்துக் கணக்கை அளிக்கவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக அரசு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டத்தை கடந்த 1998-ம் ஆண்டு கொண்டு வந்தது. இதில் கடந்த 2022-ம் ஆண்டு திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதில் 34ஏ என்ற புதிய விதி சேர்க்கப்பட்டது. அதில், "நகர்ப்புற உள்ளாட்சிகளில் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள், துணை தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் மற்றும் கவுன்சிலர்கள் தங்கள் சொத்துக் கணக்கு, தங்கள் மனைவி, குழந்தைகளின் சொத்துக் கணக்குகளை பதவியேற்ற 90 நாட்களுக்குள் மாநகராட்சியில் சமர்ப்பிக்க வேண்டும்" என கூறப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து 2023-ம் ஆண்டு தமிழ்நாடு நகரப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் கொண்டுவரப்பட்டன. அதில் 183-வது விதியில், "அந்த சொத்துக் கணக்கு விவரங்களை மாநகராட்சி ஆணையரிடம் வழங்க வேண்டும். அதை ஆணையர் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்" என கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர் சங்கர் என்பவர் சென்னை மாநகராட்சி கவுன்சிலர்கள் தாக்கல் செய்த சொத்துக் கணக்கு விவரங்கள் குறித்து, தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்டிருந்தார். இதற்கு பதிலளித்த மாநகராட்சி நிர்வாகம், "சென்னை மாநகராட்சியில் உள்ள 200 வார்டு கவுன்சிலர்களில் 157 பேர் சொத்துக் கணக்கை தாக்கல் செய்யவில்லை. இதில் 4 பேர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டனர். 2 பேர் தகுதி நீக்கம் செய்யப்பட்டுவிட்டனர். 43 கவுன்சிலர்கள் மட்டுமே தங்கள் சொத்துக் கணக்கை தாக்கல் செய்துள்ளனர்" என தெரிவித்திருந்தது.

சொத்துக் கணக்கை தாக்கல் செய்யாதவர்கள் பட்டியலையும் மாநகராட்சி வழங்கியுள்ளது. அதில் மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார் உள்ளிட்ட 157 கவுன்சிலர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இவர்களின் பதவிக்காலம் இன்னும் 8 மாதங்கள் மட்டுமே உள்ள நிலையில், அரசின் விதிகளை மதிக்காமல் மக்கள் பிரதிநிதிகளாக தொடர்ந்து வருவது சர்ச்சைக்கு உள்ளாகியுள்ளது.

இவர்கள் மீதான நடவடிக்கை தொடர்பாக மாநகராட்சி அதிகாரிகளிடம் கேட்டபோது, "சட்ட விதிகளில் தலைமை, துணை தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள், கவுன்சிலர்கள் பதவியேற்ற 90 நாட்களுக்குள் சொத்துக் கணக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று தான் உள்ளது. தவறினால், அவர்கள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பாக எந்த அம்சங்களும் இடம் பெறவில்லை. இருப்பினும் 30 நாட்களுக்குள் தங்கள் சொத்துக் கணக்குகளை தாக்கல் செய்யுமாறு அனைத்து கவுன்சிலர்கள், மேயர், துணை மேயருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது" என்றனர்.




மனிதாபிமான அடிப்படையில் விலங்கு பிறப்பு கட்டுப்பாடு விதிகளை அமல்படுத்த வேண்டும், தெரு நாய்களை உரிய முறையில் பாதுகாக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, விலங்கு நல ஆர்வலர்கள் பங்கேற்ற பேரணி சென்னை எழும்பூரில் நேற்று நடைபெற்றது. படம்: எஸ்.சத்தியசீலன்

### சூட்கேஸில் இளைஞர் சடலம் விவகாரத்தில் திடீர் திருப்பம்

# மனைவியே கணவரை கொன்றது அம்பலம்

## ஆண் நண்பருடன் கைது

**சென்னை**

பெரம்பூரில் சூட்கேஸில் இளைஞர் சடலம் கண்டெடுக்கப்பட்ட விவகாரத்தில் திடீர் திருப்பமாக, திருமணத்தை மீறிய உறவால் மனைவியே கணவரை கொன்றது தெரியவந்துள்ளது.

சென்னை பெரம்பூர் ரயில் நிலைய நடைபாதையில் இருந்த ஒரு சூட்கேஸில் இளைஞரின் சடலம் சிதைக்கப்பட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை கண்டெடுக்கப்பட்டது. இந்த கொடூர சம்பவம் தொடர்பாக 8 தனிப்படைகளை அமைத்து போலீஸார் விசாரித்து வந்தனர். இதில், கொலை செய்யப்பட்டவர் சென்னை தேனாம்பேட்டையில் வசித்த அசாம் மாநிலத்தை சேர்ந்த அமீர் அலி (30) என்பது தெரியவந்தது.

அமீர் அலியை அவரது மனைவி ரோகிமா (31) தனது ஆண் நண்பரான அசாம் மாநிலத்தைச் சேர்ந்த அஸ்லாம் (31) என்பவருடன் சேர்ந்து கொலை செய்தது தெரியவந்தது. இதையடுத்து, இருவரையும் கைது செய்து போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர். கொலைக்கான காரணம் குறித்து, ரோகிமா கூறியதாக போலீஸார் தெரிவித்ததாவது:

அமீர் அலி எனக்கு 2-வது கணவர். வட மாநிலங்கள் மற்றும் வங்கதேசத்தில் இருந்து சென்னைக்கு மருத்துவ சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு தங்கும் இடவசதி செய்து தரும் தொழிலை கணவருடன் செய்து வந்தேன். என் கணவருக்கு பல பெண்களுடன் தவறான தொடர்பு இருந்தது.

நான் கண்டித்தும் என் பேச்சை கேட்கவில்லை. என்னை அடிக்கடி கொடூரமாக அடித்து துன்புறுத்தினார். அவரது நடவடிக்கைகளை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

> உடலின் நடுப்பகுதியை மட்டும் சூட்கேஸில் அடைத்து, ஆட்டோவில் எடுத்துச் சென்று பெரம்பூர் ரயில் நிலைய படிக்கட்டுகளுக்கு அடியில் வீசி விட்டு சென்றோம்.

**உறவுக்கு இடையூறாக**

இந்நிலையில்தான் அஸ்லாமுடன் எனக்கு தொடர்பு ஏற்பட்டது. இதை கணவர் கண்டித்தார். இதனால், நாங்கள் இருவரும் ஓடிச் சென்று வேறு இடத்தில் கணவன், மனைவியாக வாழலாம் என நினைத்தோம். அந்த திட்டத்தை பின்னர் கைவிட்டோம்.

எங்கள் உறவுக்கு இடையூறாக இருக்கும் கணவரை தீர்த்துக்கட்ட முடிவு செய்தோம். சம்பவத்தன்று அமீர் அலி போதையில் இருந்தார். அவருக்கு தூக்க மாத்திரை கலந்து கொடுத்து மயங்கச் செய்தேன். அவர் மயங்கியதும் நானும், அஸ்லாமும் அவரை கொலை செய்து தலை, கைகள் மற்றும் கால்களை துண்டு துண்டாக வெட்டினோம்.

உடலின் நடுப்பகுதியை மட்டும் சூட்கேஸில் அடைத்து, ஆட்டோவில் எடுத்துச் சென்று பெரம்பூர் ரயில் நிலைய படிக்கட்டுகளுக்கு அடியில் வீசி விட்டு சென்றோம். தலை, கால் மற்றும் பாகங்களை செங்கல்பட்டில் ஓடும் ரயிலில் வீசினோம். இதற்கு அஸ்லாம் எனக்கு முழுமையாக உதவினார்.

இவ்வாறு ரோகிமா கூறியதாக போலீஸார் தெரிவித்தனர்.

முதல்கட்ட விசாரணை மட்டுமே தற்போது நிறைவடைந்துள்ளது. இவர் சொல்வது உண்மையா? கொலைக்கு வேறு ஏதேனும் காரணம் உள்ளதா என தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. அமீர் அலியின் உடல் பாகங்கள் வீசப்பட்டதாக கூறப்படும் இடங்களில் அவற்றை போலீஸார் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

## தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப கவுன்சில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

**சென்னை**

தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கவுன்சில், உயிரி தொழில்நுட்பத்தில் கூட்டு ஆராய்ச்சி, நீடித்த தொழில்நுட்ப மேம்பாடு, திறன் உருவாக்கம் தொடர்பாக மகளிர் சங்கத்துக்கான பொன்விழா உயிரி தொழில்நுட்பப் பூங்கா நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசின் உயிரி தொழில்நுட்பத் துறை மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (டிட்கோ) நிதியுதவி பெறும் நிறுவனமாகும்.

இந்த ஒப்பந்தத்தில் தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்பக் கவுன்சில் உறுப்பினர்-செயலர் எஸ்.வின்சென்ட், மகளிர் சங்கத்துக்கான பொன்விழா உயிரி தொழில்நுட்பப் பூங்கா நிறுவனத்தின் பொது மேலாளர் பி.சுதாகரன் ஆகியோர் கையெழுத்திட்டு ஆவணங்களை பரிமாறிக்கொண்டனர். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக வின்சென்ட் கூறும்போது, "இந்த ஒப்பந்தமானது உயிரி தொழில்நுட்பம், வேளாண் தொழில்நுட்பம், உயிரி-தகவலியல், மூலக்கூறு உயிரியல், நுண்ணுயிரியல் மற்றும் இதர வளர்ந்து வரும் துறைகளின் வளர்ச்சியில் கவனம் செலுத்தும். இரு நிறுவனங்களும் தொழில்நுட்பத் திறமை, ஆராய்ச்சி வசதிகள் ஆகியவற்றை பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளும். இதற்காக கருத்தரங்கம், பயிலரங்கம் நடத்தப்படும். மாநிலத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவக்கூடிய இந்த ஒப்பந்தம் 5 ஆண்டு காலம் நடைமுறையில் இருக்கும்" என்றார்.

## பள்ளிவாசல் உலமாக்களுக்கு ரூ.50,000 இருசக்கர வாகன மானியம் விண்ணப்பங்கள் வரவேற்பு

**செங்கல்பட்டு**

தமிழ்நாடு அரசின் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற உலமாக்களுக்கு புதிய இருசக்கர வாகனம் வாங்க ரூ.50,000 மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக செங்கல்பட்டு ஆட்சியர் மருத்துவர் மு.வீரப்பன் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ், 18 வயது முதல் 60 வயது வரை உள்ள மற்றும் தமிழ்நாட்டிலுள்ள பள்ளிவாசல்களில் பணியாற்றும் பேஷ் இமாம்கள், ஆலிம்கள், அரபி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகள் உள்ளிட்ட உலமாக்கள் பயன்பெறலாம்.

மானியம் பெற விரும்புவோர், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் செயல்பட்டு வரும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் அலுவலரிடம் விண்ணப்பப் படிவத்தை பெற்று, தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய ஆவணங்களுடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் அல்லது சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் ஜூன் 30-க்குள் சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## 5 வயது சிறுமியிடம் முதியவர் அத்துமீறல் போக்சோ சட்டத்தில் கைது

**படப்பை**

தாம்பரம் அருகே படப்பை அடுத்த சாலமங்கலம் பகுதியில் 5 வயது சிறுமியிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட 60 வயது முதியவர் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

சாலமங்கலம் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் (60) என்பவர் எலக்ட்ரீஷியனாக பணியாற்றி வருகிறார். இவர், ஒரு வீட்டில் மின்சாரப் பணிக்காக சென்றிருந்தபோது, தனியாக இருந்த 5 வயது சிறுமியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இதுகுறித்து சிறுமி தனது பெற்றோரிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து, கிருஷ்ணகுமாரை கூடுவாஞ்சேரி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து நீதிமன்ற உத்தரவின்படி சிறையில் அடைக்கப்பட்டார்.


**இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, சென்னை-38.**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கீழ்க்காணும் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் IREPS இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. எனவே, நிறுவனங்கள் www.ireps.gov.in இணையதளத்தில் உள்நுழைந்து (login) குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் பேரில் விலைப்புள்ளி கோருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த ஒப்பந்தப்புள்ளிக்கு மேனுவல் விலைப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி எண். | திறந்த ஒப்பந்தப்புள்ளி குறிப்பு எண். | பணியின் பெயர் | அளவு | ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1. | 2026471212119-OT02-SPRING | MS/C/OT/02/ஸ்ப்ரிங் பேக்கிங்/2026-27 | RDSO வழிகாட்டுதல் எண். RDSO/2017/CG-01 (திருத்தம் 03) ஜனவரி 2025-ன் படி பேக்கிங் ஆஃப் ஸ்ப்ரிங்ஸ் | பிரைமரி இன்னர் ஸ்ப்ரிங் 31792 நெ.; பிரைமரி அவுட்டர் ஸ்ப்ரிங் 9318 நெ. | 26.06.2026 15.00 மணி வரை |
| 2. | 2026471212224-OT13-KMROOF | MS/C/OT/13/KM ரூஃப்/ஷெல்/2026-27 | அசெம்பிளி மற்றும் TIG வெல்டிங் ஆஃப் கொல்கத்தா மெட்ரோ TC, MC மற்றும் DTC ரூஃப்கள் | 156 நெ. | 26.06.2026 15.00 மணி வரை |

மேற்கண்ட விளம்பரத்தின் இந்தி மொழிவடிவம் https://icf.indianrailways.gov.in என்ற இணையதளத்தில் கிடைக்கும்.

**இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, சென்னை-38.**

கீழ்க்காணும் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் IREPS இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. எனவே, நிறுவனங்கள் www.ireps.gov.in இணையதளத்தில் உள்நுழைந்து (login) குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் பேரில் விலைப்புள்ளி கோருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த ஒப்பந்தப்புள்ளிக்கு மேனுவல் விலைப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

| திறந்த ஒப்பந்தப்புள்ளி எண். | பணியின் சுருக்கமான விளக்கம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (ரூ) | ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| 2026476212238 | LHB பிரிவின் கடை எண் 19-ல் அமைந்துள்ள, இன்வென்டரி எண் 19509 கொண்ட TOS-KURIM நிறுவனத்தின் CNC 5 - ஆக்சிஸ் போகி ஃபிரேம் இயந்திரமயமாக்கும் மையத்திற்கான மூன்று ஆண்டு காலத்திற்கான முழுமையான பராமரிப்பு பணி ஒப்பந்தம். | ரூ.6,48,35,100/- | 25.06.2026 15.00 மணிமுதல் |

மேற்கண்ட விளம்பரத்தின் இந்தி மொழிவடிவம் https://icf.indianrailways.gov.in/. என்ற இணையதளத்தில் கிடைக்கும்.

துணை முதன்மை இயந்திரப் பொறியாளர் / பிளான்ட்

**இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, சென்னை-38.**

கீழ்க்காணும் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் IREPS இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. எனவே, நிறுவனங்கள் www.ireps.gov.in இணையதளத்தில் உள்நுழைந்து (login) குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் பேரில் விலைப்புள்ளி கோருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த ஒப்பந்தப்புள்ளிக்கு மேனுவல் விலைப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

| திறந்த ஒப்பந்தப்புள்ளி எண். | பணியின் சுருக்கமான விளக்கம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (ரூ) | காலம் | ஒப்பந்தப்புள்ளி தேதி: மூடப்படும் தேதி | ஒப்பந்தப்புள்ளி தேதி: திறக்கப்படும் தேதி |
|---|---|---|---|---|---|
| 2026499212249 | ஐசிஎஃப்-இன் தளவாடப் பிரிவின் இயந்திரப் பொறியியல் துறையில் உதவியாளர்களை வெளிப்பணியமர்த்தல் செய்வதற்கான சேவை ஒப்பந்தம். | ரூ. 6,75,93,620.81/- | 312 வேலை நாட்கள் | 30.06.2026 14.45 மணி | 30.06.2026 15.00 மணி |

மேற்கண்ட விளம்பரத்தின் இந்தி மொழிவடிவம் https://icf.indianrailways.gov.in/. என்ற இணையதளத்தில் கிடைக்கும்.

**வரி விளம்பரங்கள்**

**சுய செய்தி**

**பெயர்மாற்றம்**

I Navaneethakrishnan S S/O, Sivaprakasam A R/o A7 Block - 7 Pro Police Quarters,rohini Garden, Raja Annamalaipuram, Chennai have changed my name to Naveen S.

**பொது**

**பொது அறிவிப்பு**

**பொது அறிவிப்பு**

சென்னை-600 052, செங்குன்றம், காலஞ்சென்ற திரு.காதர்பாஷா அவர்களின் மனைவி திருமதி. K. ஷமீம்பேகம், திரு.காதர்பாஷா அவர்களின் வாரிசுகளான திரு.R.K. சைத் இர்ஃபான் பாஷா, திருமதி.K.சபீனா பேகம், K.இஷ்ரத் பேகம் என்பவர்களுக்கு சொந்தமான சொத்தானது வடசென்னை பதிவு மாவட்டம் தற்பொழுது திருவள்ளூர் உபபதிவு மாவட்டம், ஆரணி உபபதிவு மாவட்டம் திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், கன்னிகைப்பேர் குரூப்பில் அடங்கிய கிருஷ்ணாபுரம் கிராமத்தில் தாக்கலாகிவரும் சர்வே எண்.271/1B - க்கு, விஸ்தீரணம் 0.38 சென்டும், சர்வே எண்.271/2-க்கு, விஸ்தீரணம் 0.96 சென்டும், சர்வே எண்.272/4-க்கு, விஸ்தீரணம் 0.84 சென்டும், சர்வே எண்.251/8B 2 - க்கு,விஸ்தீரணம் 0.10 சென்டும், சர்வே எண்.251/9B 2 - க்கு, விஸ்தீரணம் 0.03 சென்டும், சர்வே எண். 257/3-க்கு, விஸ்தீரணம் 0.32 சென்டும், சர்வே எண்.259/3-க்கு, விஸ்தீரணம் 0.56 சென்டும், சர்வே எண்.260/1-க்கு, விஸ்தீரணம் 0.33 சென்டும், சர்வே எண்.260/2-க்கு, விஸ்தீரணம் 1 ஏக்கர் 56 சென்டும், சர்வே எண்.261-க்கு, விஸ்தீரணம் 0.31 சென்டும், சர்வே எண்.262-க்கு, விஸ்தீரணம் 0.10 சென்டும், சர்வே எண்.263/2-க்கு, விஸ்தீரணம் 0.43 சென்டும், சர்வே எண்.259/1-க்கு, விஸ்தீரணம் 0.50 சென்டும், சர்வே எண்.268/1-க்கு, விஸ்தீரணம் 0.65 சென்டும், சர்வே எண்.268/2-க்கு, விஸ்தீரணம் 0.45 சென்டும், சர்வே எண்.269/3-க்கு, விஸ்தீரணம் 0.50 சென்டும், சர்வே எண்.259/2-க்கு, விஸ்தீரணம் 0.90 சென்டும் மற்றும் சர்வே எண்.267/2-க்கு, விஸ்தீரணம் 0.93 சென்டும் சேர்த்து ஆக மொத்தம் 9 ஏக்கர் 85 சென்ட் கொண்ட சொத்தை எனது கட்சிகாரரான சென்னை-600 066, புழல், நண்டல்கழனி, ஜி.என்.டி.ரோடு, நெ.121, என்ற விலாசத்தில் உள்ள M/s.RKR ENTERPRISES, என்ற நிறுவனத்தின் உரிமையாளர் திரு.K.கோவிந்தராஜன் என்பவர் கிரயம் பெற இருப்பதால் அந்த சொத்தை பொறுத்து யாரேனும் உரிமை, உரிமை கோரிக்கை உள்ளவர்கள் அதற்கான ஆவணங்களுடன் நேரடியாகவோ அல்லது தொலைபேசியிலோ இந்த கீழ்கண்ட அறிவிப்பு கண்ட 15 - நாட்களுக்குள்ளாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு தவறும் பட்சத்தில் அந்த ஆவணத்தின்மூலம் எந்தவித நிவாரணமும் கோரமுடியாது என்றும் அது எனது கட்சிகாரரை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்பதனை இந்த பொது அறிவிப்பின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

C.Thandavamoorthy B.A.,B.L
S.Gnanasekaran .B.B.A.,B.L
Advocate
No.12/1, Vallar Street,
Sri Krishna Complex,
Redhills, Chennai52

**பொது அறிவிப்பு & பொறுப்பு துறப்பு**

சென்னை - 600 017, தி.நகர், சாரி தெரு, புதிய எண். 24/1, பழைய எண். 17/1, என்ற முகவரியிலுள்ள சொத்தின் முழு உரிமையாளர் கணவர் திரு. M. ரவி & திருமதி. கௌரி [illegible]

**இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, சென்னை-38.**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். ICF/PCMM/EOT/23/2026. தேதி: 05.06.2026**

கீழ்க்காணும் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் IREPS இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. எனவே, நிறுவனங்கள் www.ireps.gov.in இணையதளத்தில் உள்நுழைந்து (login) குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் பேரில் விலைப்புள்ளி கோருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த ஒப்பந்தப்புள்ளிக்கு மேனுவல் விலைப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளும் திறக்கப்படும் மற்றும் மூடப்படும் நேரம் 14.15 மணி. குறிப்பிட்ட விளம்பரத்தின் இந்தி மொழி வடிவம் கீழ்க்கண்ட இணையதளத்தில் கிடைக்கும். www.icf.indianrailways.gov.in

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி எண். | ஒப்பந்தப்புள்ளி தலைப்பு | அளவு | கெடு தேதி / நேரம் |
|---|---|---|---|---|
| 01. | 02260073 | S&I ஆஃப் பெட்டியின் பக்கவாட்டு நுழைவு கதவு | 400 ஜோடிகள் | 05.06.2026 |
| 02. | 06261755 | சப்ளை ஆஃப் தெர்மல் இன்சு சைடுவால் | 20000 ச.மீ | 22.06.2026 |
| 03. | 08261437 | S&I ஆஃப் எலெக்ட்ரிக் கேபிள் ட்ரே MEMU OB CGL | 12 செட்கள் | 23.06.2026 |
| 04. | 03261724 | ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஷீட் அளவு: 5 X 1200 X 2600 MM | 33194 கிலோ | 23.06.2026 |
| 05. | 03261085 | ஆன்டி ரோல் பார் பிராக்கெட் | 4550 நெ. | 23.06.2026 |
| 06. | 03261629 | ரிரெய்னிங் கப் AAA05094 | 12681 நெ. | 24.06.2026 |
| 07. | 08261414 | ட்ரைன் 18-க்கான பம்ப் கன்ட்ரோல் அசெம்பிளி | 156 நெ. | 24.06.2026 |
| 08. | 08261336 | கேபிள் 2.5 SQ MM சாக்லேட் 1.8KV | 137000 மீட்டர் | 24.06.2026 |
| 09. | 08261370 | ட்ரான்ஸ்ஃபார்மர் 60 KVA 750/415V, 3P | 72 நெ. | 25.06.2026 |
| 10. | 08261495 | S&I ஆஃப் GPS PAS, PAPIS LWFAC PP2 | 5 செட்கள் | 25.06.2026 |
| 11. | 07262083 | S&I ஆஃப் ஒன் கோச் செட் ஆஃப் LWACCW PP2 வகை கோச்சுகளுக்கு தேவையான முழுமையான இருக்கைகள் மற்றும் படுக்கை வசதிகள் கொண்ட தொகுப்பு | 26 செட்கள் | 25.06.2026 |
| 12. | 08261364 | அம்ரித் பாரத்-க்கான செட் ஆஃப் பேனல்ஸ் | 200 நெ. | 26.06.2026 |
| 13. | 03261524 | LHB போகிக்கான கன்ட்ரோல் ஆர்ம் செட் | 975 செட்கள் | 26.06.2026 |
| 14. | 03261741 | ஏர் ஸ்ப்ரிங்குகளுடன் கூடிய (L.H) FIAT போகிக்கான முழுமையான டோம் மற்றும் ரிசர்வாயர் அசெம்பிளி | 1200 செட்கள் | 26.06.2026 |
| 15. | 03261765 | UNF பிரேக் சப்போர்ட் | 7857 நெ. | 29.06.2026 |
| 16. | 02261486 | கோச் செட் ஆஃப் ரூஃப் அசெம்பிளி, ஃபைனல் ரூஃப் எலிமென்ட் மற்றும் ரூஃப் எண்ட் பார்ட் (LWFCWAC) | 14 செட்கள் | 30.06.2026 |
| 17. | 08261431 | செட் ஆஃப் பேனல்ஸ் EDTS-355 US வாட்டர் டேங்க் | 338 செட்கள் | 02.07.2026 |
| 18. | 03261804 | CP PIN கம்ப்ளீட் ஃபிக்ஸிங் அயிட்டங்கள் | 2958 செட்கள் | 03.07.2026 |
| 19. | 01255322A | ஃபையர் அலாரம் ஸ்மோக் டிடெக்டர் | IREPS இணையதளத்தை பார்க்கவும் | 06.07.2026 |
| 20. | 03261666 | பீஸ்டு, கிரவுண்டு, ஸ்ட்ரைட்டண்டு & மாக்னாஃப்ளக்ஸ் க்ராக் டெஸ்டட் ஸ்ப்ரிங் ஸ்டீல் ரவுண்டு பார்ஸ் | IREPS இணையதளத்தை பார்க்கவும் | 06.07.2026 |

**திருத்தம் எண்.23**

கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு IREPS-ன் இணையத்தை பார்க்கவும்.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி எண். | ஏற்கனவே உள்ள மதிப்பு | திருத்தம் செய்யப்பட்ட மதிப்பு |
|---|---|---|---|
| 01. | 02261343 | 02.06.2026 | 08.06.2026 |
| 02. | 02261283 | 03.06.2026 | 10.06.2026 |
| 03. | 02261281 | 04.06.2026 | 10.06.2026 |
| 04. | 02261295 | 05.06.2026 | 10.06.2026 |
| 05. | 02251980 | 05.06.2026 | 12.06.2026 |
| 06. | 03261401 | 05.06.2026 | 15.06.2026 |
| | | அளவு 525947 கிலோ | 1042034 |
| | | அளவு 1625675 கிலோ | 1991109 |
| | | அளவு 46238 கிலோ | 70014 |
| 07. | 03261554 | 04.06.2026 | 22.06.2026 |
| | | சிறப்பு நிபந்தனைகள் மற்றும் கூடுதல் ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன. முழு விவரங்களுக்கு IREPS இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள டெண்டர் ஆவணத்தைப் பார்க்கவும். | |
| 08. | 03261327 | 04.06.2026 | 19.06.2026 |
| | | முன்வைப்புத் தொகை 2000000 | 5000000 |
| | | அளவு 1038 நெ. | 1736 நெ. |
| 09. | 06260053 | 05.06.2026 | 10.06.2026 |
| 10. | 06261200 | 03.06.2026 | 05.06.2027 |
| | | கட்டண நிபந்தனைகள், தொழில்நுட்ப இணக்கப்பாடு மற்றும் சரிபார்ப்புப் பட்டியல் தொடர்பாக திருத்தங்கள் (சேர்த்தல் மற்றும் நீக்கல்) மேற்கொள்ளப்பட்டுள்ளன. முழு விவரங்களுக்கு IREPS இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள டெண்டர் ஆவணத்தைப் பார்க்கவும். | |
| 11. | 07261697 | 05.06.2026 | 12.06.2026 |

**செஷன்ஸ் நீதிமன்ற நீதிபதி, மகிளா நீதிமன்றம், செங்கல்பட்டு**

**IA.NO. 136/2014 in O.S.288/2005**

1. **ஜெயலட்சுமி பட்டாபிராமன்,** க/பெ. பட்டாபிராமன், வசிப்பிட முகவரி : எண்.4-B, குருகிருபா அபார்ட்மெண்ட்ஸ், எண்.117-2 B, ஸ்ரீனிவாசமூர்த்தி அவென்யூ, அடையார், சென்னை – 600 020.
2. **அனுராதா தணிகைநாயகம்,** க/பெ. தணிகைநாயகம், வசிப்பிட முகவரி : எண்.17/10, வெங்கடராமன் தெரு, ஆரியாபுரம் (R.A.புரம்), சென்னை – 600 028. ... மனுதாரர்/பிரதிவாதிகள் 2 மற்றும் 3

மற்றும் –எதிர்–

1. **புவனேஸ்வரி ராமலிங்கம் (காலம் சென்றவர்),** க/பெ. ராமலிங்கம்,
2. **M. ராமலிங்கம்,** த/பெ. லேட். D.முருகேசன், வசிப்பிட முகவரி : பழைய எண். A-43, புதிய எண். AC-136, பிளாக் 105, தரைத் தளம், சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை – 600 040.
3. **R.விஜயன்,** த/பெ. ராமலிங்கம், வயது 61. வசிப்பிட முகவரி : எண்.10, சிந்து நகர், ஸ்ரீராம் நகர் விரிவாக்கம், உடுமலைப்பேட்டை – 642 126.

**விற்பனையை இறுதி செய்வதற்கான தெரிவித்தல் அறிவிப்பு மற்றும் விற்பனை அறிவிப்பு**

O.S. 288/2005–ல் தொடரப்பட்ட IA.No. 136/2014 வழக்கில் செங்கல்பட்டு மகிளா நீதிமன்றத்தால் 22.10.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, கீழே விவரிக்கப்பட்டுள்ள காலஞ்சென்ற திரு. துரைசாமி முருகேசன் பெயரில் உள்ள அசையா சொத்தினை, உரிய விதிமுறைகளைப் பின்பற்றி பகிரங்க பொது ஏலத்தில் விற்பனை செய்து, அதன் மூலம் கிடைக்கும் தொகையை (செலவினங்கள் போக) நீதிமன்ற உத்தரவில் குறிப்பிட்டுள்ள பங்குதாரர்களுக்குப் பிரித்து வழங்குவதற்காக வழக்கறிஞர் திரு. T. இளங்கோவன் அவர்கள் வழக்கறிஞர் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். அதன்படி, வழக்கறிஞர் ஆணையர் அவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்தினை பொது ஏலம் மூலம் விற்பனை செய்ய உத்தேசித்து, இந்த விற்பனை பிரகடனத்தை வெளியிடுகிறார்.

**சொத்து விபரம் – சொத்தின் அட்டவணை**

மெட்ராஸ் பதிவு மாவட்டம், ஆலந்தூர் சார் பதிவு மாவட்டம், நந்தம்பாக்கம், தமிழ்நாடு பகுதி பாதுகாப்புச் சேவை கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் லிமிடெட் திட்டத்தின் மனை எண்.30, சர்வே எண்.166, இதிலடங்கியதும் அதன் பகுதியுமான காலி நிலத்தின் எல்லைகள் விபரம்: வடக்கே – பிளாட் எண்.31 மனை, கிழக்கே – பிளாட் எண்.67 மனை தெற்கே – 80 அடி ரோடு, மேற்கே – 45 அடி ரோடு மற்றும் கோல்ஃப் விளையாடும் மைதானம். அளவுகளாக, கிழமேல் 100 அடி, தென்வடல் 60 அடி என இந்த அளவுகளுள்ள 6000 சதுரடி, மேலும் தரைத் தளம் 2000 சதுரடி மற்றும் முதல் தளம் 2000 சதுரடி கொண்ட தார்க் கட்டிடத்துடன், அனைத்து உரிமைகள், குடிநீர் இணைப்பு மற்றும் மின்னிணைப்பு உள்ளிட்ட வசதிகளுடன்.

| | |
|---|---|
| ரூ.65,00,000/– முன் வைப்பு டெபாசிட் தொகை மற்றும் பிற நிலுவைத் தொகைகளின் கணக்கு விபரம் | Beneficiary Name: M/s.Charitarth Financial Services Private Limited; Bank Name: Equitas Small Finance Bank Limited; Branch : Gopalapuram, Chennai; Account No : 200003256848, IFSC Code: ESFB0001388; Account Type : Current |
| நிர்ணயிக்கப்பட்ட விலை (நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்டு உச்ச நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டது) | ரூ.6,50,00,000/– |
| முன் வைப்புத் தொகை (நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்டது) | ரூ.65,00,000/– (நிர்ணயிக்கப்பட்ட விலையில் 10%) |
| முன்வைப்புத் தொகை செலுத்துவதற்கான மற்றும் KYC யுடன் கூடிய டெண்டர் ஆவணம் சமர்ப்பிக்க கடைசித் தேதி | 06.07.2026, மாலை 4.00 மணிக்கு முன்னதாக |
| சொத்தினைப் பார்வையிடும் தேதி மற்றும் நேரம் | 20.06.2026 (சனிக்கிழமை), காலை 11.00 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரை. |
| டெண்டர் படிவங்கள் மற்றும் நிபந்தனை விபரங்கள் பெற தேதி மற்றும் நேரம் | 20.06.2026 (சனிக்கிழமை), மாலை 3.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை. |
| சொத்து ஆவணங்கள் பார்வையிடும் முகவரி | சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் நீதிமன்ற உத்தரவுகளைப் பார்வையிட விரும்பும் வாங்குபவர்கள், தங்களது வழக்கறிஞருடன் இணைந்து 22.06.2026 மற்றும் 23.06.2026 ஆகிய தேதிகளில் பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 4.30 மணிக்குள் நீதிமன்ற அலுவலக அறையில் பார்வையிடலாம். |
| தொடர்பு கொள்ள வேண்டியவர் | Charitarth Financial Services Private Limited; ஸ்கைலைன் கேஸில், எண்.27, அப்துல் ரஜாக் தெரு, 2வது தளம், சைதாப்பேட்டை, சென்னை – 600 015. மொபைல் : 78239 90441; மின்னஞ்சல் : charitarthrabeek@gmail.com; வழக்கறிஞர் ஆணையர் : திரு. T. இளங்கோவன் (9043777878) |
| ஏலத் தேதி மற்றும் நேரம் | 09.07.2026, காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை முதல் 50 நிமிடங்களுக்குப் பிறகு, ஒவ்வொரு புதிய ஏலக் கேட்புக்கும் தலா 3 நிமிடங்கள் வரம்பற்ற நீட்டிப்பு வழங்கப்படும் |
| சேவையாளர் பெயர் மற்றும் இணையதளம் | Sabre Edge IT Solutions - http://eauction.ipsupport.in |

தேதி : 05.06.2026
இடம் : செங்கல்பட்டு

வழக்கறிஞர் ஆணையர்
T. இளங்கோவன்